[illegible]

[illegible]

[illegible]

[illegible]

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞானசம்பந்தகுருப்யோநம:

சிவபஸ்மவைபவம்.

இது

திருவேட்டீஸ்வரன்பேட்டை

ஸ்ரீவாதபுரீசபாதசேகரபக்தஜனசபை

அடியவர்களுளொருவரும

தஞ்சாவூர்

செண்ட்பீடர்ஸ் காலீஜ

தமிழ்ப்பண்டிதர்

பிரும்மஸ்ரீ-ஆ. சேதுராமபாரதியாரவர்கள்

மாணாக்கருமாகிய

தி. முத்துராமபிள்ளையவர்களால்,

வெளியிடப்பட்டது.

1901.

சென்னை.

பண்டித மித்திர யந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது

விலை அணா ஒன்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞானஸம்பந்தகுருப்யோநம:.

சிவபஸ்மவைபவம்.

வைணவநண்பர்சிலர் 'பாஷண்டர்கள் கபடமான வஞ்சகோபாய பத்திரிகை' என ஒன்றெழுதி அதில் பஸ்மநிந்தை சிவநிந்தை சிவனடியார் நிந்தைமுதலாயின பொதியச்சைவர் சிலர் பெயரைக்குறித்துக்காட்டித் தூஷித்து வெளியிட்டனர். அப்பத்திரிகையைக்கண்டு நம சைவநண்பர்கள் சிலர் அத்தூஷணையைப் பரிகரிக்கும்பொருட்டுச் சபைகூட்டி உபந்நியாஸங்களை செய்வதாகவுந்தெரிகிறது. அஃது மங்களமாயிறு மாகுக. வைணவநண்பர் வெளியிட்ட அப்போலிப் பத்திரிகை சைவரெல்லாருக்கும் பெருந்துக்கத்தை விளைத்தலால் அப்பத்திரிகையை விசாரித்து ஒழிப்பது எமக்குக் கடமையாயிற்று. அப்பத்திரிகை யெழுதிய வைணவநண்பர் ஒருசிறிதும் யோசியா[illegible] மல் வேதப்பிரமாணங்களுக்கு விருத்தமாகத் தொடங்கும்போ[illegible] "பிணச்சாம்பல் பூசித்திரியும்" என்று பஸ்மத்தைப் புறம்பழி[illegible] புகுந்தார். இருந்தவாறு அங்ஙனம் ஹேதுபுத்திகொண்டு எழுதி[illegible] வேதப்பிரமாணங் கொண்டு சாதித்து அதனை யிகழ்ந்திருந்தால் அவ[illegible] ரை நாம் குறைகூற இடமிராது. பிரமாணம் ஒன்றுதானுங் காட்[illegible] கோபாவேசராய்ச் சிறுமகாரைப்போல் இகழுரை நிகழ்த்திய [illegible] ருக்குப் பெருமையாகாது. அவ்வாறன்று சைவர்கள் எங்க[illegible] வத்தை மரபின்றிப் புறம்பழித்தமையால் யாமும் வைணவர்[illegible] அங்ஙனம் இகழ்ந்தோமெனின், அவ்வாறு செய்தல் சி[illegible] டையாய முழுவதனறிப் பயனொன்றும் விளைவதில்லை. வேதமு[illegible] லப்பிரமாணங்களைக் கொண்டு இறைவனொருவனுண்டென்று [illegible] த்துகின்றவர்களாகிய சைவர் வைணவர் முதலிய மதஸித்தாந்திகள் சமயவாதங்கள் செய்து தெளிவடைய விரும்பினால் பிரமாணங்க

ளிற் கட்டுண்டு ஒருவரொருவரிடத்து மரியாதையாகவும் கௌரவமாகவும் வியவகரித்தல் வேண்டும். அதுவே அவர்களுக்குப் பெருமையாம். இது நிற்க.

இனி அவ்வைணவ நண்பர் திருநீற்றைப் 'பிணச்சாம்பல்'எனக் கூறியதென்னை? பிருகஜ்ஜாபால உபநிடதத்தில் "[illegible]" எனவும் "[illegible]" எனவும் போந்த பிரமாண வாக்கியங்களால் பஞ்ச ஐஸ்வரியத்தைத் தருவதும் பூதபிசாசங்களை விலக்குவதுமாகிய சிவபஸ்மத்திற்கும், பிணமெரிந்த சவபஸ்மத்திற்கும் வித்தியாஸந்தெரியாமல் சிவபஸ்மத்தைச் சவபஸ்மமென்று கூறத்துணிந்த நண்பரது வார்த்தை பெரியதோர் இழுக்குடைத்தாமென்க. எல்லாரும் மனுஷியர் தாமேயென்று ஞானிகளையும் ஞானசூனியர்களையும் ஒன்று படுத்தல் சாலுமோ? எல்லாரும் பெண்கள்தாமேயென்று தாயையும் பெண்டிரையுஞ்சமமாகக் காண்டல் நண்பருக்குப் பொருந்துமோ? எல்லா விடமும் ஒன்றுதானேயென்று கோயிலிடத்தையும் வீட்டிடத்தையும் ஒன்றாகச் சொல்லுதல் கூடுமோ? இந்த வியவஸ்தை யறிந்திருந்தால் சிவபஸ்மத்தையும் சவபஸ்மத்தையும் ஒன்று படுத்திக்கூறி வேதநிந்தை, பஸ்மநிந்தையில் இறங்கமாட்டார் நண்பரென்றொழிக. வேதத்தைப் பிரமாணமாகக் கொண்ட வைதிக சிரேஷ்டரெல்லாரும் பஸ்மருத்ராக்ஷதாரணபராளாய் வாழ்ந்து பஸ்மத்தைப் பூஷித்துவரவும், அவரொடு முரணிப் பஸ்மநிந்தைசெய்த இவ்வைணவ நண்பர் எந்த வைதிக சிரேஷ்டருட் சேர்ந்தவரோ அறியேம். பஸ்மஜாபாலம், பிருஹஜ்ஜாபாலம், காலாக்கி ருத்ரம், தைத்திரியம், ஜாபால்யுபநிஷத்முதலிய சுருதிகளாற் பிரசித்தமாகப் புகழ்ந்தோதப்பட்ட சிவபஸ்மாவை நிந்திப்பவர்களை எந்த ஸாதுக்களோ வைதிகரெனக் கூறுவர்? பிருஹஜ்ஜாபால உபநிடமானது "[illegible]" என்னும் பிரமாணவாக்கியத்தினாற் பஸ்மாவினிடத்திலும் அதைத் தரிக்க விதிக்கும் உபநிஷதங்களினும் துவேஷபுத்தி வகிப்பவர்கள் மகா பாதகங்களைச்செய்தவர்களென்றறியத் தக்கது என்று வலியுறுத்திக் கூறுதலை யறியவல்லார்க்குப் பஸ்மநிந்தைசெய்த அவ்வைணவ நண்பர் வேதப்பிர

மாணத்திற் கட்டுப்படாது அதற்குப் புறம்பா யொதுங்கியவரென்றும் அவரோடு உரையாடுதலும் இழுக்காமென்றும் உணர்வர். இவர் உண்மையாக வேதப் பிரமாணததிற் பக்தி விசுவாசமுடையவராயிருந்தால், பஸ்மதாரணவிஷயத்தில் தமக்கு உடன்பாடில்லாவிடினும் அதனை யிகழ்ந்துரையார். இனி வேதப்பிரமாணத்தி லடங்கி விவகரியாமல் தமக்குத் தோன்றியவாறெல்லாம்வசைமொழி கூறித் திரிவார் நாவினை யடக்குதலரிது. சைவர்களாகிய நாங்கள் வேதப் பிரமாணத்திலடங்கி விவகரிக்கமாட்டாதாரோடு வாதிட முந்துவதில்லையென்பதூஉம் அறியக்கடவர்.

இனி, உலகத்திலுள்ள எல்லா மதங்களும், அந்தந்த மதங்களிலுபாசிக்கப்படுந் தெய்வங்களும், அவ்வம்மதாசாரங்களும் பிறவும் உண்மையாமென்று கொண்டொழுகும் சித்தாந்த சைவத்திற்கு எந்த மதமும் விரோதமாகாது. வைணவர் தம் மதாசாரங்களையே பெரிதும் மதித்துத் திருமண்காப்பைவிடச் சிறந்தது பிறிதில்லையென்று போற்றுவார்களானால் அதனைக் குறைகூறவேண்டிய அவசியம் எமக்கிராது. பஸ்மத்தைப் பிணச்சாம்பலென்று அவர்கள் வலியவந்து குறைகூறுவார்களானால், அப்போது வேதமுழுவதூஉம் பஸ்மவைபவமேயன்றிப் பிறிதொன்றுங் கேட்கப்பட்ட தின்றென்றும், திருமண்காப்பிடுதல் வேத விரோதமானதென்றும், அஃது அவைதிகர்களுக்கே சித்திக்கத்தக்கதென்றும் பிரமாண முகத்தால் யாம் விளக்கிக் காட்டுவோம். கோபி சந்தனதாரணமாகிய ஊர்த்வபுண்டரமே விஷ்ணு பக்தர்களுக்கு வேதங்களில் விதிக்கப்பட்டது, அவ் ஊர்த்வ புண்டர தாரணமும் பஸ்மதாரணத்தை யின்றியமையாதென்பது

"[illegible]"

என்னும் வாக்கியத்தாற் கோபீசந்தன மிடுமாறு விதித்து "[illegible]" என்னும் பிரமாணவாக்கியத்தால் ஊர்த்வபுண்டரத்தின் மேல் பஸ்மதாரணஞ்செய்யற்பாற்றென்று அறுதியிட்டுக் கூறிய வாசுதேவ உபநிடதப்பொருளை யறிவார்க்கெல்லாம் இனிது விளங்

கும். அவ் ஊர்த்வபுண்டர தாரணத்திலுஞ் சேராது ஒதுங்கிய மிருத்புண்டர தாரணத்தை மேற்கொண்டவராகிய அவ்வைணவ நண்பர் ஸர்வோத்தமமான விபூதி தாரணத்தை யிழித்துரைக்க வந்ததைக்கண்டு ஸாதுக்கள் வெறுக்கின்றனரென்க. வேதசுருதிலெங்கா வது ஆதாரமெடுத்துக் காட்டித் தமது மிருத்புண்டர தாரணத்தை ஸ்தாபிக்க மையறியாது வேதோக்தமான பஸ்ம தாரணத்தைப் பழிக்கவந்தது பெரியோர் அபசாரமாம் என்று தெளிக.

இனி அவ்வைணவநண்பர் 'பிணச்சாம்பல்' என்று இழித்துக் கூறிய சொற்களைக் கிடந்தபடியே வைத்து அதுவும் பஸ்மவைபவத்தையே விளக்குமாறும் ஒரு சிறிது காட்டுதும். பரமாத்மாவென்பது பிறப்பு இறப்பு இல்லாததும், எல்லாமறிவதும், எங்கும் நிறைவது மாகவுள்ள வியாபகப்பொருளாகலின் அது யோனி வாய்ப்பட்டுப் பிறத்தல் இலாதாம். ஜீவாத்மாவெனப்படும் பசுக்களெல்லாம் சுருங்கிய அறிவும், சுகதுக்கமுமுடையனவாகையால் அவையே பிறந்திறப்பனவாம். திருமால் முதலிய தேவரெல்லாரும் பிறந்திறந்தாரெனபதூஉம், சிவமொன்றே பிறந்திறவாத பரப்பிரமப் பொருளெனபதூஉம் அவ்வவர் வைபவங்களைக் கூறும் நூல்களாற்பெறக்கிடத்தலின் திருமான்முதலிய தேவரெல்லாரும் பசுக்களென்றும் சிவமொன்றே அப்பசுக்களுக்குப் பதியாகிய கடவுளென்றும் துணியப்படும். இதுபற்றியே சுருதி "[illegible]" என்னும் பிரபல பிரமாணத்தால் எல்லாத்தேவர்களும் பசுக்கள் அவற்றின்பதி 'சம்பு' என்று பிரகாசப்படுத்தி, அவ்வெல்லாத்தேவர்களு மாவாரிவரென்பது இனிது விளங்க "[illegible]" என்று கூறிற்று ஜீவர்களெல்லாரும் சிருஷ்டி திதி ஸம்ஹாரம்என்னும் முத்தொழிற்பட்டொருபவராதலால்மகா ஸம்ஹாரகாலத்தில் திருமால் முதலிய தேவர்களெல்லாரும் இறந்துபட அவரையெல்லாந் தகித்த பிணச்சாம்பலைத் திருமேனியில் உத்தூளனஞ்செய்துகொண்டு முழுமுதற்கடவுளாகிய மாசங்கார உருத்திர மூர்த்தி ஆனந்தத்தாண்டவம் புரிவாராகலின், அவ்வைணவ நண்பர் கூறிய 'பிணச்சாம்பல்' என்னுஞ் சொற்கள் சைவர்களாகிய எங்களுக்குத் துக்கத்தை புண்டபண்ணுமென்க. மகா ஸம்ஹாரகாலத்தில் அச்சங்கார கிருத்தியத்தைப் புரிபவராகிய உருத்திரமூர்த்தியையன்றி வேறு பிறரில்லாமைபற்றியே அதர்வசிர உபநிடதம

:யாகவானவா மதிர்ஞாநவிஷயா யதஸு" என்று வலியுறுத்துக் கூறமாயிற்று. இத்யாதி பிரமாணபரகுல்யங்களால் 'பிண்சாம்பல்' என்பதனுண்மை வெளிப்படுதலின் 'யானுமறியேன் அவளும்பொய் சொல்லாள்' என்னும் பழமொழியோடொத்து நின்றன அந்தணர் கூறிய சொற்களென்றறிக.

இனி அவ்வைணவநண்பர் 'ஸ்ரீ ஆழ்வார் ஸ்ரீசூக்திகளை அபார்த்தம்பண்ணினவிஷயம்' எனவென்று கூறினார். "கரியமேனிமிசை வெளிய நீறு சிறிதேயிடும்—பெரியகோயிற்றடங்கண்ணன்" எனவும் "நீறு செவ்வேயிடுவாரைக் காணின் நெடுமாலடியாரென்றோடும்" எனவுமபோந்த ஆழ்வார் அருளிச்செய்த பிரமாணவாக்கியங்களைச் சைவர்களாகிய யாம் எங்கள் சமயத்திற்கு ஏற்பப்பொருள் பண்ணிக்கொண்டோமென்பதும், அங்ஙனம் பொருள்செய்தல் தகாதென்பதுமே அந்நண்பரது அபிப்பிராயமாம். திருமால் தமது கரிய மேனியில் வெளியநீற்றினைச்சண்ணித்துத் திகழுகின்றானென முரண்தொடை முரணணி பற்றிக்கூறிய அவ்வாக்கியப்பொருணயத்தையும் சொன்னயத்தையும் சாதாரணமாய் நோக்கவல்லார்க்கும் 'நீறு' என்பது திருநீறு என்றே பொருள்தருமாதலால், அதனையாம் அபார்த்தம் பண்ணினேமென்றல் நியாயநெறியோடு ஒரு சிறிதும் பொருந்தாத இழுக்குரையாமென்றொழிக. இது கிடக்க, வாக்கியங்களுக்கு வாச்சியார்த்தம் சொல்லுதலே சிறந்ததாயினும், ஆக்கியோன் குறிப்பொடு படாது வேறுபடுமாயின் அவன் குறிப்பொடு படுத்து அவ்வாக்கியங்களைப் பொருத்தி முக்கியார்த்தலக்ஷணம் பண்ணுதலும் நான்மரபாதலின், திருமாலடியவர்களாகிய ஆழ்வார்கள் சிவசின்னங்களைத்தங் கடவுளர்க்குக் கூறுமென்பதுபற்றி, அவ்வாக்கியங்களுக்கு முக்கியார்த்தலக்ஷணம் பண்ணிப் பொருள்கோடலே முறைமையாமென்றுரைத்து 'நீறு' முதலிய சொற்களுக்கு வேறுபொருள் கூறுதுமெனின் அதுவும் பொருந்தாமை காட்டுதும். ஆழ்வார்களிருந்த காலத்துத்திருமண்காப்பிடுதலுண்டாயினன்றோ அவர்கள் அதனைத்தம்பாசுரங்களிற் கிளந்தோதுவர். அவர்கள் நிலவிய நாளில் பஸ்மதாரணமும் கோபீசந்தனதாரணமுமேயன்றி வேறு பிறிதின்மையின் அதனையோதாராயிற்று என்றுணர்க. குஜராத்து முதலிய வடநாடுகளிலுள்ள விஷ்ணுபக்தர் கோபீசந்தனதாரணமும், பஸ்மருத்ராக்ஷதாரணமும் இன்றுகாறும் செய்துவாழ்தலும், மலையாளம் கன்னடம் முதலிய தென்றேசங்களிலுள்ள வைணவர் இன்னும் பஸ்மருத்ராக்ஷதாரணஞ்செய்துவாழ்தலும் எவரும் அறிந்தவிஷயமன்றோ? வைண

வாசாரியராகிய இராமாநுஜர் தங்காலத்தன்றோ திருமண்காப்பிடும் வழக்கத்தை உண்டுபண்ணினர். இவ்விஷயத்தில் நம் வைஷ்ணவ நண்பர்க்குச் சந்தேகம் நிகழுமாயின் வேதப்பிரமாணங்களாலும், ஆங்கில பாஷாவித்துவான்களாற் கண்டுரைக்கப்படும் பிரபலபிரமாணங்களாலும் திருமண்காப்புப் பிராசீனகாலத்தது அன்றென்றும் அஃது இராமாநுஜர் காலத்திலேயே உண்டாயினதென்றும் ரூபிக்கப் பின்னிடைவோம். இனித் திருமண்காப்பு என்று அங்ஙனம் மதந்தரப் பொருள்சொல்லுதல் அமையாதாயினும், வாசுதேவோபநிடத முதலியவற்றிற் புகழ்ந்தோதப்பெற்ற கோபீசந்தனத்தையே ஆழ்வார்கள் கூறினரென்று அர்த்தம் பண்ணுதுமெனின், 'நீறு' என்னுஞ் சொல்லுக்கு அங்ஙனம் பொருள்படுத்தத் துணிந்தவர் தமிழிலக்கண விலக்கிய மிருந்த மூலையையுங் கண்டறியாதவரென்றன்றோ பெரியோர்கூறுவர். அப்படியே கொள்வோமாயினும், வாசுதேவர் தமக்குப் பிரீதியைத் தருங் கோபீசந்தனத்தினையேல் எமது திருநீற்றினையன்றோ இங்ஙனம் சொல்லியவிஷயம் வாசுதேவோபநிடதத்தில் ஆகாது பிரகாசப்படுத்தப்படுதலின் அவ்வாறு பொருள் சொல்லுதலும் அநுசிதமாயொழிந்ததன்றோவென்னை? இனிப் பெருந்தகையினராகிய ஆழ்வார்கள் வேதப்பிரமாணங்களில் பக்தி விசுவாசமுடையவராதலின் அவ்வேதப்பிரமாணங்களுக்கு இணங்கத் தமது விஷ்ணுபக்தியாலுந்தப் பஸ்மதாரணத்தைக் கூறி மகிழ்ந்தார்கள். "[illegible]" என்னும் பிரமாணத்தால் ஸ்ரீராமபிரானுக்குச் சாங்கம பஸ்மதாரணத்தை விதித்துப் புகழ்ந்த ராம ரஹஸ்யோபநிஷத்திற்கும் "[illegible] [illegible] [illegible]" என்னும் பிரமாணவாக்கியத்தாலங்ஙனமே தத்தாத்திரேயராகிய மகாவிஷ்ணுவுக்குப் பஸ்மதாரணத்தையெடுத்துக் கூறிய சாண்டில்யோபநிஷத்திற்கும் இணங்கவன்றோ சிஷ்டர்களாகிய ஆழ்வார்கள் "கரியமேனிமிசை வெளியநீறு சிறிதேயிடும், பெரியகோயிறடங்கணனன்" என்று திருமாலை வழுத்துவாராயினர். வேதப் பிரமாணங்களுக்குக் கட்டுண்டு வாழ்ந்த தஞ்சமயப்பெரியாரோடு இணங்கிவாழாமல் ஆசாரியதுரோகமாச அவர்களொடு மாறு

பட்டு வேதப்பிரமாணங்களை அலட்சியஞ் செய்து பஸ்மநிந்தை செய்யத்தலைப்பட்டது நம்வைணவ நண்பருக்குத் தகாது தகாது.

இனி அவ்வைணவநண்பர் “அவ்விஷ்ணுவினாலேயே சிருஷ்டிக் கப்பட்டும் ரக்ஷிக்கப்பட்டும் பக்ஷிக்கப்பட்டுமிருக்கின்ற பிரம்ம ருத் ரேந்திராதி தேவர்கள்” எனக்கூறிய வாக்கியப்பொருள் வன்மையை ஒருசிறிது ஆராய்வாம். பிறந்திறந் துழலுதலாகிய ஆன்மலக்ஷணங் களிற்பட்டுப் பசுப்பொருளென்றே வேதப்பிரமாணங்களால் அறுதி யிட்டுரைக்கப்பட்ட விஷ்ணுதேவர், “ப்ரஹ்ம விஷ்ண [illegible] [illegible] ஸேவித” எனவும் “ஸர்வஸ்மாத் த்ரிதயாதீதம் துரீயம் [illegible] | ப்ரஹ்ம விஷ்ணவாதி அபிவந்த்யம் [illegible] ஷாம் ஜநகம் [illegible] | [illegible]” எனவும் போந்த சுருதிப் பிரமாணங்கள் பிரம விட்டுணு முதலியவர்களாற் சேவிக்கப் பட்டவரும் மூன்றவத்தைகளைக் கடந்தவரும் துரியப்பொருளான வரும் சிவபரஞ்சுடரென வந்திக்கும் எமப்பனைச் சிருஷ்டித்தார், ரக்ஷித்தார், பக்ஷித்தாரெனக் கூறும் துஷ்ட வசனங்கள் வேதப்பிர மாணங்கொள்ளாத அவைதிகர் வார்த்தையாமென்றொழிக. பசு விஷ்ணுவைத் தியாதாவென்றும் அவ்விஷ்ணுதேவரால் வந்திக்கப் படும் சிவபரம்பொருளைத் தியேயரென்றும் வேதங்கள் அனந்த பிரமாண வசனங்களால் முழங்கும் உண்மையை எங்கள் குருமூர்த் தியாகிய வைதிக சைவசித்தாந்த சண்டமாருதம் ஸ்ரீலஸ்ரீ - சோம சுந்தரநாயகவள்ளல் அனேக கிரந்தங்களில் விளக்கிக்காட்டி நிறுவிய ஜயத்தம்பத்தை அசைக்கமாட்டாத நம் வைணவநண்பர் வாளாது சிவதூஷணஞ்செய்யத்தலைப்பட்டது அவருக்கு அழகன்று; அது பாபஹேதுவாம். வைணவமத சித்தாந்தத்தைப் பரக்க வாராய்ந்து விஷ்ணுதேவரிடத்து அன்பு ததும்பிவாழ்ந்த வைணவப்பெரியோர் யாரும் இங்ஙனஞ் சிவதூஷணஞ்செய்திலர்; மதாபிமானம் மேலிட்டு த்தம்மிறைவனிடத்தும் அன்பில்லாது காமவெகுளி மயக்கமுடைய ராகிய வைணவர் சிலரே யிங்ஙனஞ் சிவாபராதத்தைத் தேடிக் கொள்வர். அவர் எங்ஙனமாயினுமாகுக. எமதப்பனாகிய சிவபரம் பொருளை யிவர் தூஷித்தமையால் அத்தூஷணையைப் பரிகரித்து வேதப்பிரமாணங்களால் அச்சிவமே பரம்பொருளென வலியுறுத் தற்பொருட்டு மற்றிஃதெழுதினமென்க. விஷ்ணுமுதலிய தேவர்

கன் அனேக விடங்களில் அனேக காலங்களிற் சிவாராதனைஞ்செய்து உயர்தனரென்பதற்குத் திருமாற்பேறு, திருமாணிகுழி, இராமேச்வரம் முதலிய க்ஷேத்திரங்களே சான்றுரைக்கும் இதுவன்றியும் ''தத்ரைவ பூர்வஸ்யாம் திஸி ப்ரஹ்மா க்ருதாஞ்ஜலிபுடோ மாமுபாஸ்தே | தக்ஷிணஸ்யாம் திஸி விஷ்ணு: க்ருதாஞ்ஜலிபுடோ மாமுபாஸ்தே'' என்னுஞ் சுருதியால் காசிக்ஷேத்திரத்தில் பூர்வதிக்கில் பிரமதேவரும் தக்ஷிணதிக்கில் விஷ்ணுதேவரும் அஞ்சலி கூப்பிய கையராய் என்னையே உபாஸிக்கிறாரென்று சிவபெருமான் சொன்னதாக வெளிப்பட்டது. இத்தம் பிரமாணசுருதிக்கு நம்வைஷ்ணவ நண்பர் யாது சொல்வர்? இது கிடக்க. விஷ்ணுதேவர் பிரபாவத்தைக் கூறுவதாகிய பாகவதம் ''ஜ்ஞாநஸ்ரவணம் ஸ்ரஷ்டாரம் ஸிவம்'' என்று கூறுதற்கும், இராமாயணம் ''தேவதேவம் மஹாதேவம்'' என்று கூறுதற்கும், பகவற்கீதை ''தமேவ ஸரணம் கச்ச ஸர்வபாவேந பாரத'' என்றுரைப்பதற்கு மெல்லாம் நம் வைஷ்ணவ நண்பர் யாது சொல்லவல்லார்? அற்றேல், விஷ்ணு புராணங்களிற் சிவபரம்பொருட்பெருமை கூறாதவென்னையெனின், ஸர்வ பூதாந்தராத்மாவாகிய சிவபெருமான் ஏனைத்தேவர்களையெல்லா மதிஷ்டித்து நடத்துபவனாகலானும், சிவபெருமானையின்றிச் சேதநாசேதநப் பிரபஞ்சங்களியங்கமாட்டாமையானும், அதிஷ்டிக்கப்படும் அத்தேவர்க்குக் கூறப்படும் மகிமையெல்லாம் அந்தராத்மாவாகிய சிவபெருமானுக்கே உரியனவென்பது சான்றோர்க்கெல்லாம ஒப்பமுடிந்தது. சாங்கியம் யோகம் பாஞ்சராத்திரம் வேதம் முதலிய எல்லாக்கலைகளானும் அறியப்படும் பொருள் சிவபரஞ்சுடரே யென்பதுதோன்ற ''ஸாங்க்யம் யோகம் பாஞ்சராத்ரம் வேதா: பாஸுபதம் ததா | ஜ்ஞாநாநி ஸிவமேவ ஜ்ஞேயம் ப்ரஹ்மகோஷ ஹேதவ:'' என்று கூறிய உப்பிருஹமணவாக்கியப் பொருளும் எமது மேற்கோளை நிறுவுமாறு காண்க. இவ்வாறு யாமெடுத்துக்காட்டிய பிரமாண சுருதிகளால் வேதோக்தமாக வழுத்தப்படும் பரம்பொருளாவார் சிவபெருமானொருவரே யாமென்பதூஉம், அச்சிவபரம்பொருட் சந்நிதியில் ஏனைத்தேவர் குழாங்களெல்லாம் பசுக்களாகவே யொழிவரென்பதூஉம் இனிது விளங்குதலின் இத்துணைப்பெருஞ் சிறப்பினதாகிய பதிப்பொருளைப் பசுப்பொருளாகிய விஷ்ணுதேவர் சிருஷ்டித்தார்

இர்ட்சித்தார் பட்சித்தார் என வைணவநண்பர் கூறிய வார்த்தை பெரிதும் அவலமாயொழிந்ததென்க.

இனி அவ்வைணவநண்பர் விபூதியானது அசுரமோகனார்த்தமாகச் செய்யப்பட்டதென ஒன்று கூறினர். இவ்வாறு கூறிய நண்பர் தமது மிருத்புண்டரதாரணமே தேவர்கள்பொருட்டுச் செய்யப்பட்டதெனவுங் கூறி நாட்டாதொழிந்தகாறென்னை? தமது மிருத்புண்டரதாரணமானது அவைதிகமா யொதுக்கப்பட்டமையா லதனைப்பற்றி யேதுஞ் சொல்லாமல் வாளாது சிவபஸ்மதூஷணையிலிறங்கி இழுக்கினர். இதுகிடக்க, தேவர்களொடு மறுதலைப்பட்டனராயினும் அத்தேவர்களைப்போலவே அக்நிஹோத்ரமுதலிய வைதிக கன்மங்களை அநுஷ்டித்து வைதிகர்களாய் வாழ்ந்தார்களென்று அசுரர்களை யினிது புகழ்ந்தோதும் ஸ்ரீராமாயணப்பொருளை யறிந்தாராயின் நண்பரிவ்வாறெல்லாங் குழறுவாரல்லரென்றொழிக. வைதிகராகிய அசுரர் வேதோக்தமாகிய விபூதியைத் தரித்து வாழ்ந்தார்களென்பதனால் விபூதியின் வைபவம் அதிகரிப்பதன்றி ஒருசிறிதுங் குறைவுபடாமையால் 'அசுரமோகனார்த்தம்' என்னுஞ் சொற்களில் மறைந்துநின்று அவ்வைணவநண்பர் விகளித்தது பயன்படாதாயிற்று. அங்ஙனமாயினும் அசுரர் தீயகன்மங்களைச்செய்து கொடியராக வாழ்ந்தமையால் அவர்களாலணிந்துகொள்ளப்பட்ட விபூதியும் தீயதாயிற்றெனின், வைணவருள்ளுஞ் சிலர் தீயகன்மங்களைப்புரிந்து தீயராய் வாழ்கின்றமையின் அவர் அணிந்துகொள்ளுந் திருமண்காப்புந் தீயதாமென்று கடாவுவார்க்கு இறுக்கலாகாமையின் அவ்வாறு விளைதல் போலியாமென்றொழிக. இவொர் தீயராயினுந் தூயராயினும் அவராலிடப்படுகின்ற திருநீறானது அவரைப் புனிதராக்கிச் சிவானந்தத்திலிருத்துவ துண்மையாகையால் இடப்படுவதாகிய திருநீற்றால் தமக்குச் சிறப்புவருதலல்லது இடுகின்றாராகிய இவரா லதற்குச் சிறப்புவருதலின்றென்க. அஃதன்றியும் பசுக்களாகிய நாம் நம்மைப் பொதிந்துகிடக்கும் மலத்தைப் போக்கல்வேண்டிப் பசுவின் மலத்தைத்தகித்து அணிதல்வேண்டும். நாமும் பசுக்கள் ஏனைப்பிராணிகளுள்ளும் நம்மைப்போலப் பெயருடைய பிராணியும் பசு. நாம் நமது மலத்தை யெரித்துச் சிவத்தை யடைதல்வேண்டும் அதற்குக் குறியாக அப்பசுவின் மலத்தைத்தகித்து அணிந்து சிவாராதனம் செய்கின்றோம். இங்ஙனம் நாடோறும் பசுக்களாகிய நமது இயல்பும், நம்மைப்பொதிந்திருக்கும் மலத்தினியல்பும், அம்மலத்தைத்தகிதத்துச் சிவாராதனஞ்செய்துமியல்பும் இவற்றால்

நீறை யூட்டப்படுதலின் விபூதிதாரணைத் தினுஞ் சிறந்தது. பிறிதில்லை; இதுபற்றியன்றே ஐரோப்பாக்கண்டத்திலுள்ள அன்னியராகிய ஒரு தத்துவசாஸ்திரியார் தமது மதாசாரப்படி விபூதியணியும் புதன்கிழமை (Ash Wednesday) என்பதனைப்பற்றி விவரித்துக்கொண்டு சென்று முடிவுரையில் இனந்தோறும் இவ்விபூதியினை யணிந்து உலகர்லையாமை யுணர்ந்து சர்வாராதனஞ் செய்துபோதரும் சமயிகளாராயின் அவர் சமயம் உயர்ந்த மெய்ச்சமயமாமெனக் கூறியதூஉமென்க. ஐரோப்பியராகிய இத்தத்துவசாஸ்திரியாருக்கு உள்ள புண்ணியந்தானும் பரதகண்டத்திலுள்ள நம் வைஷ்ணவருக்கு இல்லாமற்போயது பெரிதும் விசனிக்கத்தக்கதாம். இவ்வாறு உலகெங்கணும் பரவி விளங்கும விபூதிதாரண விபவத்தை வேதங்கள் பூஷித்தது அதிசயமன்று நம் ஔவைப்பிராட்டியாரிதனையன்றோ “நீறில்லாநெற்றிபாழ்” என்று கூறினார்; இவர் கூறியதுபோலவே பிருஹஜ்ஜாபால உபநிடதமும் “[illegible]யம்” என்னும் வாக்கியத்தால் திருநீறில்லாத நெற்றியைச் சுட்டெரி; சிவாலயமில்லாத கிராமத்தைக்கொளுத்து என்று வலியுறுத்துக் கூறுவதாயிற்று. இங்ஙனம்போந்த பிரமாண வாக்கியங்களால் அசரமோஹனார்த்தமாக விதிக்கப்பட்ட திருநீறென்று அவ்வைஷ்ணவர் கூறிய வார்த்தை அவைதிகமா யொழிந்தவாறறிக.

என்றிதுவரையுங் கூறியவாற்றால் சிவபலமாலைப் ‘பிணச்சாம்பல்’ எனக்கூறியது வேதாந்தமாகிய உபநிடதச்சுருதிகளோடும அவற்றின் உபபிருமணங்களோடும் பிணங்கிய அவைதிகர் கூறும் இழிப்புரையாமென்பதூஉம், அங்ஙனம் ‘பிணச்சாம்பல்’ எனவுரைத்த அக்கூற்றுப்பாட்டுரைதானும் மாசங்காரகாலத்து அழிந்துபட்ட தேவர்களின் பிணச்சாம்பல் என்று சங்கோசவகையாற் பொருள்படுத்தப்பட்டுச் சிவமகிமையைப்பலத்தோடு இசைக்கப்படுமாமென்பதூஉம், ஆழ்வார் திருவாக்காகிய “கரியமேனிமிசை வெளியநீறு” என்னும் வாக்கியப்பொருள் ராமரஹஸ்யோபநிடதம வாசுதேவோபநிடத முதலிய பிரமாணப்பொருளோடொற்றுமையுறுதலின் அதற்கு மாறாக வேறு பொருள் சொல்லுதல் மாறுகொளக் கூறலாமென்பதூஉம், விண்டு தேவர் சிவபெருமானிடத்தில் முத்தொழினிகழ்த்திறனென்றுரை பிரமாணமில்லாத போலியுரையாமென்பதூஉம், விபூதி அசுரமோகனார்த்தம் விதிக்கப்பட்டதென்றதனுற் போந்த பயன் ஒன்று

மில்லையென்பதூஉம் பிறவும் இனிது விளக்கப்பட்டன. மற்றிதனைக் காணும் வைணவநண்பர் யாமீண்டு வெளியிட்ட பகுதிகளால் மனந் திருந்தாது திறம்பி எம்மொடு தருக்கித்துத் தெளியவேண்டினராயின், யாங்கூறுவதொன்று. அவ்வைணவநண்பரும் யாமும் ஒருப்பட்டுத் தக்காரொருவரை வாத சபைத்தலைமைபூணுவதற்குத் தெரிந்துகொள்ளல்வேண்டும். அங்ஙனந் தெரிந்தெடுக்கப்பட்ட சபைத்தலைவரால் குறிக்கப்படும் பொதுவிடத்தில் அவர் செய்யும் விதிகளுக்கிணங்கித் தருக்கித்தல்வேண்டும். அவ்வாறின்றி 'நாங்கள இன்னவிடத்தில் விபூதிதூஷணம் செயயப்போகிறோம் அங்குச் சைவர்கள வந்து வாதிடக்கடவர்' என்று கூறுதலும் அதற்கிணங்கி வாராவிட்டால் சைவர் தோற்றார்' என்று கூறுதலும் நிக்கிரகஸ்தானமாமென்றறியக்கடவர் அவரழைக்குமிடத்திற்கு யாம போகவேண்டுமென்பதென்னை ? யாமிருக்குமிடத்திற்கு அவர் வருகவென்றலதற்கெனசெய்வர் ? ஒருவரொருவருக்குக் கீழடங்கிப்போகவேண்டிய அவசியமில்லையன்றோ ? ஆதலால், அவ்வைணவநண்பர் வாதிடவேண்டினராயின் யாமேலே கூறியவாறு எம்மொடு சேர்ந்து ஒழுங்கு செயவாராக. உண்மையாராய்ச்சியிற் புகுந்திருப்பதலது பிறிதறியாம் அவ்வைணவநண்பரிடத்துப் பகைமைகொள்ளாம் ; கேண்மையே கொள்வாம். சுபம்.

முற்றிற்று.



திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ ஜ்ஞானஸம்பந்தகுருப்யோ நம:

மெய்ஞ்ஞானசாகரம்.

மக்களாய்ப்பிறந்தவர்கள் எல்லாருக்கும் சமயஞானம் என்பது மிகவும் அவசியமானதொன்றாம். இவ்வுலகம் என்பது யாது, இவ்வுலகத்தை ஒழுங்குபட அமைத்தது எது, இதில் நாம் மக்களாய்ப் பிறப்பதும் பின் இறப்பதும் என், இப்பிறப்பிறப்புக்களினின்று நாம் பேரின்பத்தை யடைதல் எப்படி என்று இன்னோன்ன விஷயங்களை ஆராய்ந்து அறிந்துகொள்ளாதவர்கள் மக்களென்று சொல்லப்படார்கள். இவ்வரிய விஷயங்களை ஆராய்வதற்காகவே உலகத்தில் அநேக சமயங்கள் பிறந்திருக்கின்றன. ஒவ்வொரு சமயத்தாரும் ஆராய்ந்துகொள்ளல்வேண்டும் இவ்வரிய பொருள்களை இச்சென்னதமிழ்நாட்டிலுள்ள நாமெல்லாம் அறிந்துகொள்ளும்பொருட்டு 'மெய்ஞ்ஞானசாகரம்' என்னும் பெயருள்ள ஒரு மாதாந்தப்பத்திரிகை பிரசுரிக்க உத்தேசிக்கின்றோம். இதில் ஆரிய சைவ வைணவ சித்தாந்தங்களும், பௌத்த சமணமாதிய உலகிற் பிரசித்தியுற்ற அநேக சமயக்கோட்பாடுகளும், அவ்வவ் ஆசாரிய பிரபாவங்களும் பிறவும் வெளிவரும். இதுவரையில் இந்த மாதிரி பத்திரிகை தமிழில் வெளிவந்ததில்லை. ஆகையால் இச்சென்னதமிழ்நாட்டிலுள்ள எல்லா நண்பர்களும் இதனை ஆதரிப்பார்களென்று பிரார்த்திக்கிறேன்.

இதற்கு வருஷ சந்தா ரூபா இரண்டு. 300-கையொப்பங்கள் சேர்ந்தபிறகு இப்பத்திரிகை வெளியிட உத்தேசித்திருக்கிறோம். பிர கையொப்பங்கள் சேருமானால் இப்பத்திரிகையின் வருஷ சந்தா ஒரு ரூபாவாகக் குறைக்கப்படும். ராயல் 8-பக்க அளவில் இரண்டு பாரங்கொண்டதாய் வெளிவரும்.

ஸ்ரீலஸ்ரீ - சோமசுந்தரநாயகரவர்கள் மாணாக்கரும், சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப்பண்டிதருமாகிய ஸ்ரீமந் - நாகப்பட்டினம் - வேதாசலம்பிள்ளையவர்கள் இப்பத்திரிகைக்குத் தலைவராயிருந்து இதனை நடத்துவார்.

இதற்குக் கையொப்பஞ்செய்வோர் எமக்காயினும் ஷெ பிள்ளையவர்கட்கு ஆயினும் எழுதித் தெரிவித்தல்வேண்டும். [illegible]

இ - முத்துராமபிள்ளை,
நெ. 87. பிள்ளையார்கோவில்வீதி,
திருவேட்டீஸ்வரர்பேட்டை, சென்னை.